நாள்: 26.08.2025
O.S. No.2/2025
பெயர்: நந்தகுமாரன் த/பெ. சங்கரன்
வா.சா.1

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

வழக்கு தொடர்ந்துள்ள இடத்தில் ஆண்டியூர் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளி உள்ளதென்றால் சரிதான். அந்த பள்ளியை நிறுவியது எனது பாட்டானார் சாமிநாதன் என்றால் சரிதான். சாமிநாதன் அப்போது அப்பள்ளியின் செயலாளர் மற்றும் நிறுவனராக இருந்தார் என்றால் சரிதான். எனது பாட்டனார் சாமிநாதனுக்கு பிறகு எனது தகப்பனார் சங்கரன் என்பவர் பள்ளியின் செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பிறகு 2 ம் பிரதிவாதி பள்ளியின் செயலாளராக இருக்கிறார் என்றால் சரிதான். எனது தகப்பானர் 26.07.2005 ல் ஒப்புதல் ஒப்புறுதி ஆவணம் எழுதிக்கொடுத்ததின் அடிப்படையில் 2 ம் பிரதிவாதி பள்ளியில் செயலாளராக இருக்கிறார் என்றால் செயலாளராக உள்ளார் ஆனால் வாடகை மற்றும் ஒப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் செயலாளராக உள்ளார். அவ்வாறு வாடகை மற்றும் ஒப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் செயலாளராக உள்ளார் என்று பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 26.07.2005 ல் வழக்கு சொத்தின் அடிமனை அதிலுள்ள கட்டிடல், கலவாட சாமான்கள், உபகரணங்கள், பதிவேடுகள், அனுபவ உரிமை அனைத்தும் ஆண்டியூர் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளி நிர்வாகத்திற்கு சொந்தமானது என ஒப்புதல் ஒப்புறுதி ஆவணத்தில் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பானர் இருந்தபோது ஆண்டியூர் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளியின் செயலாளராக இருந்தபோது நன்னிலம் பாரத மாநில வங்கியில் ஆண்டியூர் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளியின் செயலாளர் என்ற முறையில் வங்கி கணக்கு இருந்தது என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கை 2 ம் பிரதிவாதி செயலாளராக மாறிய பிறகு 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தோர்கள் எத்தனை பேர் என்றால் 5 நபர்கள் ஆவார்கள். எனது பாட்டனார் காலத்தில் அவரது சொத்துக்களை பிரித்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வாய்மொழியாக பிரித்துக்கொண்டு கரவேலாலை மூலமாக உறுதிசெய்துக்கொண்டதால் வேறு ஆவணங்கள் இல்லை. கரவோலை உள்ளதா என்றால் உள்ளது. அந்த கரவோலையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கரவோலையில் வழக்கு சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தற்போது நினைவில்லை. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்து குறித்து பாகபிரிவினையோ இதர ஆவணங்களோ ஏற்படுத்தப்படதா என்றால் இல்லை. வழக்கு சொத்துற்கு வாடகை கொடுத்து பெற்றதற்கான வாடகை ரசீது ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பின்பக்கத்திலேயே வாடகை பெறப்பட்டதற்கான கையொப்பங்கள் செய்யப்பட்டுள்ளது. எனது தகப்பனார் பெயரிலிருந்து 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு பள்ளியின் நிர்வாகத்தை பெயர் மாற்றுவதற்காக பெயரளவில் எனது தகப்பனார் ஏற்படுத்திய வாடகை ஒப்பந்தம் தான் வா.சா.ஆ. 1 ஒப்பந்தம் என்றால் சரியல்ல. 2007 க்கு பிறகு வாடகை எதுவும் அறிக்கவில்லை என்றால் சரிதான் ஆனால் நாங்கள்

கேட்டுக்கொண்டு தான் இருந்தோம். வா.சா.ஆ.1 ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் என்றால் சரிதான். ஓராண்டு காலத்திற்கு மேல் நீடிக்கக்கூடிய வாடகை ஒப்பந்தம் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டதால் தான் அது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பதவி துறப்பு கடிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். அவ்வாறு பதவி துறப்பு கடிதம் என்று கையால் எழுதியதற்கான காரணம் என்னவென்றால் செயலாளர் பதவியை 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்க வேண்டி அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நான் பள்ளியின் செயலாளர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தானது பள்ளிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. பள்ளி நிர்வாகத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யாதததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பள்ளி நிர்வாக தரப்பினர் முக்கியமான தரப்பினர் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திலுள்ள பள்ளியும் அதிலுள்ள இடமும் எனக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பள்ளிக்கு பாத்தியப்பட்டதென்பதால் எனது கூட்டுக்குடும்ப பாக பிரிவினைக்கு உட்படாது என்றால் சரியல்ல. பாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னை சேர்த்து மூன்று நபர்கள் ஆவார்கள். என்னை தவிர இருவரும் எனது சகோதரிகள். எனது சகோதரிகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2008 ல் இறந்தார். எனது தகப்பனார் இறந்து 15 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். அதனால் வழக்கானது காலாவதி சட்டப்படி பாதிக்கப்படும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பள்ளியின் கட்டிடத்திற்கு வாடகை கொடுக்க கடமை பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல. பள்ளியின் கட்டிடத்திற்கு வசம் கேட்கும் உரிமை எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.18 09:42:29 +0530